Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL:94-11-269-3831~3, FAX : 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp / www.lk.emb-japan.go.jp

**ஜப்பானிய தூதரகம்**
**பத்திரிகைச்செய்தி**

**20 பெப்ரவரி 2013**

## ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனத்தினூடாக மீளக்குடியமர்ந்த சமுதாயங்களின் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டத்திற்கு ஜப்பான் உதவிபுரிகின்றது

ஜப்பானிய அரசாங்கம், ஜப்பானிய-அரசசார்பற்ற நிறுவன ஒத்துழைப்புத்திட்டத்தின்கீழ் "திருகோணமலையிலுள்ள மீள்குடியேற்றப்பகுதிகளில் வாழ்வாதார மேம்பாட்டுத்திட்டம்"- 3ம் கட்டத்திற்காக 636,874 அமெரிக்க டொலர்களை (ஏறத்தாளரூபா 80 மில்லியன்) ஒதுக்கியிருக்கின்றது. இத்திட்டமானது பீஸ் விண்ட்ஸ் ஜப்பான் (PWJ) அரசசார்பற்ற நிறுவனத்தினால் அமுல்ப்படுத்தப்படும். PWJஆனது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2009 ம் ஆண்டு தொடக்கம் அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஓர் ஜப்பானிய அரசசார்பற்ற நிறுவனமாகும்.

இத்திட்டமானது மீளக்குடியமர்ந்த சமுதாயங்களின் வாழ்வாதாரங்களான பால்ப்பண்ணை மற்றும் விவசாயத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டத்தின் மூன்றாம்கட்டமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முதல் இரண்டு வருடகாலப்பகுதியில் பதினான்கு சிறிய குளங்கள் புனர்நிர்மாணஞ்செய்யப்பட்டு, விவசாய மற்றும் கால்நடை நலன்புரிச்சங்கங்களிற்குரிய பயிற்சிகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினூடாக திருகோணமலை மாவட்டத்திலுள்ள 2000 க்கு மேற்பட்ட குடும்பங்கள் பயனடைவார்களென எதிர்பார்கப்படுகிறது.

ஜப்பான் உலகசமாதானத்திற்காகவும் சுபீட்ஷத்திற்காகவும் அர்ப்பணிப்புடனும் ஆணித்தரமாகவும் ஆரம்ப உதவிகளைச் செய்துவருகின்றது. இதன்பொருட்டு இலங்கையில் நிலையான நீண்டகால அபிவிருத்தியின் பொருட்டு இலங்கையால் மேற்கொள்ளப்படும் தேசிய ஒருமைப்பாட்டு முயற்சிகளையும் அது ஊக்குவிக்கின்றது. இந்நிலையில் சமாதான முயற்சிகளில் ஜப்பான் பிரதான பங்காளியாக இருந்ததுடன் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதிகளில் மீள்கட்டுமானம் மற்றும் புனர் நிர்மாணப்பணிகளுக்காக மக்களின் நலன்களுக்கு மிகவும் முன்னுரிமை வழங்கி அளப்பரிய உதவிகளை வழங்கியது.

இத்திட்டத்தைப்பற்றி செல்வி தனிகுச்சி குறிப்பிடுகையில் ‘‘நாம் தொடர்ச்சியான கண்காணிப்பினுாடாக விவசாய மற்றும் கால்நடை நலன்புரிச்சங்கங்களின் ஒழுங்கமைப்புப் பரிமாணங்களைப்பலப்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம், எனவே அவர்கள் காலப்போக்கில் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கு உதவிகளை மேற்கொள்ளமுடியும். இக்திட்டத்தில் நாம் மேலும் எட்டு சிறிய குளங்களை விவசாயிகளுடன் இணைந்து புனரமைப்பதோடு எமது சேவையை சமுதாயமட்டத்தில் பால்ப்பண்ணை விவசாயிகளுடனும் தொடர்வோம். ஏனைய சமூகங்களும் பின்பற்றுவதற்காக அவர்களின் வருமான வழிகளை பல்வகைப்படுத்தி உறுதிப்படுத்துவதற்காக ஒரு நிலையான மாதிரி ஒன்றை உருவாக்க நாம் எண்ணுகின்றோம். மீளக்குடியமர்ந்த சமுதாயங்கள் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்வதற்காக கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவருகின்றனர். நாம் அதற்கு உதவ வேண்டும்’’.

20 பெப்ரவரி 2013 அன்று மாண்புமிகு ஜப்பானிய உயர் ஸ்தானிகர் திரு. நொபிஹிற்றோ ஹோபோ அவர்களுக்கும், பீஸ் வின்ட்ஸ் ஜப்பான் நிறுவனத்தின் இந்நாட்டுப்பிரதிநிதி செல்வி. கனா தனிகுச்சிக்குமிடையிலான நன்கொடை ஒப்பந்தம் கொழும்பிலுள்ள உயாஸ்தானரிகர் இல்லத்தில் கைச்சாத்திடப்பட்டது.